அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 03/94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07

1994.01.13

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

சடுதி மரண விசாரணையாளர்களுக்கான கொடுப்பனவுகள்.

---

தாபன விதிக்கோவையின் x வது அத்தியாயத்தின் 3ஆம் பிரிவுக்கு உங்கள் கவனம் கோரப்படுகின்றது. அதில் 3.4, 3.5ஆம் பிரிவுகளில் காட்டப் பட்டுள்ள மைல் கட்டணங்கள் உண்டி உறையுள் கொடுப்பனவுகள் கீழ் காட்டப்படு மாறு திருத்தப்படுகின்றன.

3.4 பொதுப்போக்குவரத்து வசதியற்ற பாதைகளிற் செல்லும் பயணத்துக்கோ அல்லது பயணத்தின் பகுதியொன்றிற்கோ மைலொன்றுக்கு 6.25ரூபா படி மைற்கூலி செலுத்தப்படல் வேண்டும்.

3.5 ஒவ்வொரு 24 மணித்தியாலயங்களைக் கொண்ட முழு நேரக் காலத்துக்கும் ரூபா. 150/-

12 மணித்தியாலயங்களுக்குக்குறையாத காலத்துக்கு ரூபா. 150/-

06 மணித்தியாலயங்களுக்குக்குறையாத காலத்துக்கு ரூபா. 75/-

இத்திருத்தம் 1993-09-01 ஆந் திகதி தொடக்கம் அமுலாகின்றது.

02. இச்சுற்றறிக்கை திறைசேரியின் உடன்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: வை. பி. புஸ்சேதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.